5596

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

அறிவுறுத்தல்கள் :

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** தகவல்களை மற்றுமொரு தரப்புடன் பரிமாறிக் கொள்பவர்
(1) தொடர்பாடுநர் ஆவார்.
(2) பெறுநர் ஆவார்.
(3) வாயிற்காப்பாளர் ஆவார்.
(4) மத்தியஸ்தர் ஆவார்.
(5) செல்வாக்குச் செலுத்துபவர் ஆவார்.

**2.** வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கேற்ப தொடர்பாடல் இடம்பெறுகின்றது. தொடர்பாடல் என்பது இதனாற் கருதப்படுவது
(1) இலக்குநோக்கியது என்பதாகும்.
(2) குறியீட்டுத் தன்மையானது என்பதாகும்.
(3) ஓர் செயன்முறை என்பதாகும்.
(4) பலதரப்பட்ட தன்மையானது என்பதாகும்.
(5) சூழமைவு சார்ந்தது என்பதாகும்.

**3.** “தொடர்பாடல் ஒரு வழிப் பாதையாகும்.” இந்தக் கூற்று அதிகம் தொடர்புடையது
(1) ஆளிடைத் தொடர்பாடலுடன் ஆகும்.
(2) வெகுசனத் தொடர்பாடலுடன் ஆகும்.
(3) முறைசார் தொடர்பாடலுடன் ஆகும்.
(4) குழுத் தொடர்பாடலுடன் ஆகும்.
(5) வாய்மொழிசாராத் தொடர்பாடலுடன் ஆகும்.

**4.** தொடர்பாடலின் கூறுகளில் உள்ளடங்கியிருப்பது
(1) நிலைநோக்கு ஆகும்.
(2) ஆழ்பரிவு ஆகும்.
(3) சூழமைவு ஆகும்.
(4) சமூகமயமாதல் ஆகும்.
(5) தொகுப்பாக்கம் ஆகும்.

**5.** சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு ஆரம்பிக்கப்பட்டது
(1) 1966 இல் ஆகும்.
(2) 1973 இல் ஆகும்.
(3) 1979 இல் ஆகும்.
(4) 1982 இல் ஆகும்.
(5) 1995 இல் ஆகும்.

**6.** தொடர்பாடலில் ‘தாக்கம்’ முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது
(1) அரிஸ்டோட்டலினால் ஆகும்.
(2) டட்லி சியர்ஸினால் ஆகும்.
(3) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லினால் ஆகும்.
(4) எட்வேர்ட் என். பெர்னேயினால் ஆகும்.
(5) பிலிப் கொட்லரினால் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



7. பொதுவான இலக்குடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படும் தொடர்பாடல்
(1) ஆளிடைத் தொடர்பாடல் ஆகும். (2) பொதுசனத் தொடர்பாடல் ஆகும்.
(3) முறைசார் தொடர்பாடல் ஆகும். (4) குழுத் தொடர்பாடல் ஆகும்.
(5) மெய்நிகர் தொடர்பாடல் ஆகும்.

8. பொதுமக்களுக்கு ஆர்வமாகவுள்ள செய்திகளையும் விளம்பரங்களையும் உள்ளடக்கிய தினசரி அல்லது வாராந்த வெளியீடு
(1) செய்திப்பத்திரிகை ஆகும். (2) செய்திக் குறிப்பு ஆகும்.
(3) சஞ்சிகை ஆகும். (4) செய்திமடல் ஆகும்.
(5) கையேடு ஆகும்.

9. உபகரணமொன்றைப் பயன்படுத்தும் **தேவையிராத** தொடர்பாடல் வகை எது?
(1) முறைசார் தொடர்பாடல் (2) செவிப்புலத் தொடர்பாடல்
(3) வாய்மொழிசாராத் தொடர்பாடல் (4) ஆளுள் தொடர்பாடல்
(5) முறைசாராத் தொடர்பாடல்

10. படைப்பாக்கத்தின் முக்கிய கூறுகள் தொடர்பில் லியானார்டோ டாவின்சியினால் விளக்கமளிக்கப்பட்ட முக்கிய அம்சமொன்று
(1) கற்பனை ஆகும். (2) மென்மை ஆகும்.
(3) முன்மொழிவு ஆய்வு ஆகும். (4) மீளச்செய்யப்படும் பயிற்சி ஆகும்.
(5) சரிபார்த்தல் ஆகும்.

11. பேராசிரியர் வில்பர் ஷ்ராம் முன்வைத்ததன்படி, வெகுசன ஊடகங்களால் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான வகிபாகங்கள்
(1) ஆசிரியர் மற்றும் பாதுகாவலரின் வகிபாகங்கள் ஆகும்.
(2) பாதுகாவலர் மற்றும் பாராட்டும் உணர்வை விரிவாக்கும் வகிபாகங்கள் ஆகும்.
(3) ஆசிரியர், பாதுகாவலர் மற்றும் கலந்துரையாடல் சபையின் வகிபாகங்கள் ஆகும்.
(4) அறிவை வளப்படுத்துதல், புத்தாக்கப் பரவுகை மற்றும் பாராட்டும் உணர்வை விரிவாக்கும் வகிபாகங்கள் ஆகும்.
(5) புத்தாக்கப் பரவுகை, அறிவை வளப்படுத்துதல் மற்றும் செய்திகளைப் பரப்புதல் வகிபாகங்கள் ஆகும்.

12. தெஹிவளை கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் 'இதழியல் கற்கைநெறி' யின் பாடவிதானத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
(1) பேராசிரியர் விமல் திஸாநாயக்க (2) கலாநிதி எட்வின் ஆரியதாச
(3) பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர (4) பேராசிரியர் சுனந்த மகேந்திர
(5) பேராசிரியர் எம். பி. ஆரியபால

13. "சமூகத்தின் முழுமையான அபிவிருத்தி என்பது உள, ஆன்மிக, பொருள்சார் தேவைகளை உள்ளடக்கியிருக்கும்." இந்தக் கருத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
(1) டட்லி சியர்ஸ் (2) எட்கர் ஒவென்ஸ்
(3) மகாத்மா காந்தி (4) ஸ்ரீநிவாஸ் மெல்கோட்டே
(5) வில்பர் ஷ்ராம்

14. யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்டு, பேணப்பட்டுவரும் இலங்கையின் தொட்டுணர முடியாத மரபு எது?
(1) நாடகம் (2) நூல் பொம்மலாட்டம் (3) ஓவியம்
(4) நாட்டார் கலை (5) அரங்கு

15. பாடசாலையின் காலை ஒன்றுகூடலில் மாணவர்கள் குழுவொன்று நாட்டுப்பற்றுப் பாடலொன்றை ஆற்றுகையுடன் அளிக்கை செய்தது. இங்கு பயன்படுத்தப்பட முடியுமான தொடர்பாடல் வடிவங்கள்
(1) வாய்மொழி, முறைசார், குழுத் தொடர்பாடல்கள் ஆகும்.
(2) ஆற்றுகை, பேச்சு, ஆளிடைத் தொடர்பாடல்கள் ஆகும்.
(3) வாய்மொழி, வாய்மொழிசாரா, பொதுசனத் தொடர்பாடல்கள் ஆகும்.
(4) செவிப்புல, கட்புல, பொதுசனத் தொடர்பாடல்கள் ஆகும்.
(5) ஆற்றுகை, வாய்மொழி, வாய்மொழிசாராத் தொடர்பாடல்கள் ஆகும்.

[பக். 3 ஐப் பார்க்க

16. ஒருவர் தனது வாழ்வைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை வலுப்படுத்துவதை உளவியல் பொருட்கோடலின்படி
(1) சகவாழ்வு எனலாம்.
(2) தன்னம்பிக்கை எனலாம்.
(3) சுய எண்ணக்கரு எனலாம்.
(4) சுயநிர்ணயம் எனலாம்.
(5) சுயவிருப்பு எனலாம்.

17. ஊடக விளங்கறிவு அடிப்படையில் விருத்தியடைவது
(1) தனிப்பட்ட அவதானத்தின் மூலம் ஆகும்.
(2) தனிப்பட்ட அவதானம், அறிவுக்கட்டமைப்புக்கள் மூலம் ஆகும்
(3) தனிப்பட்ட அவதானம், அறிவுக்கட்டமைப்புக்கள், திறன்கள் மூலம் ஆகும்.
(4) தனிப்பட்ட அவதானம், அறிவுக்கட்டமைப்புக்கள், திறன்கள், தகவல் தொகுப்புகள் மூலம் ஆகும்.
(5) தனிப்பட்ட அவதானம், அறிவுக் கட்டமைப்புக்கள், திறன்கள், தகவல் தொகுப்புகள், இலக்குகள் மூலம் ஆகும்.

18. ஒரு குறிப்பிட்ட இலக்குக் குழுவிற்கான தொடர்பாடல்
(1) ஊடகக் குவிகை ஆகும்.
(2) சிறுகூறுகளாக்குதல் ஆகும்.
(3) ஒருவழித் தொடர்பாடல் ஆகும்.
(4) தேவையை மையப்படுத்துதல் ஆகும்.
(5) ஊடக ஒழுங்குபடுத்தல் ஆகும்.

19. நிறுவனமொன்றின் சிதையப்பெற்ற பிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்கு, முக்கியமான சேவையைப் பெறக்கூடியதாக இருப்பது
(1) ஊடகவியலாளர்களிடமிருந்து ஆகும்.
(2) சந்தைப்படுத்துநர்களிடமிருந்து ஆகும்.
(3) விளம்பரதாரர்களிடமிருந்து ஆகும்.
(4) நிகழ்வு முகாமையாளர்களிடமிருந்து ஆகும்.
(5) பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகளிடமிருந்து ஆகும்.

20. ஜோசப் ஆர். டொமினிக்கின் கூற்றுப்படி, பொதுமக்கள் தொடர்பிற்கும் விளம்பரப்படுத்தலுக்குமான பொதுவான ஒரு பண்பாக அமைவது
(1) சந்தைப்படுத்துதல் ஆகும்.
(2) முகாமைத்துவம் ஆகும்.
(3) தூண்டுதல் ஆகும்.
(4) அனுசரணை ஆகும்.
(5) தனிப்பட்ட உறவுகள் ஆகும்.

21. ஆய்வொன்றின் முழுச் சனத்தொகையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அலகு
(1) தரவு ஆகும். (2) சதவீதம் ஆகும். (3) ஆகாரம் ஆகும.
(4) இடையம் ஆகும். (5) மாதிரி ஆகும்.

22. ஊடகத் தொழிற்துறையில் போட்டிகளை அனுமதிப்பதன் ஊடாக நிதி ஆதாயத்தைப் பெற வழிசெய்யும் ஊடகப் போக்கு எது?
(1) பூகோளமயமாக்கம் (2) வணிகமயப்படுத்தல்
(3) கட்டுப்பாட்டுத் தளர்வு (4) ஊடகக் குவிகை
(5) சிறுகூறுகளாக்குதல்

23. பூகோளமயமாக்கத்துடன் அதிக இடைவெளி கொண்ட உறவை எடுத்துக் காட்டுவது
(1) தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி ஆகும்.
(2) பயணத்தினதும் புலம்பெயர்வினதும் வளர்ச்சி ஆகும்.
(3) சமூகப்போட்டியின் அதிகரிப்பு ஆகும்.
(4) தனிப்பட்ட முதலீடுகளைச் சேர்த்துக்கொள்ளல் ஆகும்.
(5) மானுடப் பன்மைத்துவத்தின் விரிவாக்கம் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**24.** இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் 14 (1) (அ) எடுத்துக்கூறப்படும் உரிமை

(1) இலங்கைப் பிரஜைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.
(2) ஒருவர் தனது சொந்த விருப்புரிமைப்படி பயன்படுத்த முடியுமானதாகும்.
(3) இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவராலும் அனுபவிக்கப்பட முடியுமானதாகும்.
(4) ஓர் அடிப்படை உரிமையாகக் கவனத்திற் கொள்ளப்படவில்லை.
(5) பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்திற்கு மாத்திரம் அமுலாகும் வகையினதாகும்.

**25.** பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற்கொள்க.

*A* - நாட்டார் பண்பாட்டில், படைப்பாக்கங்கள் அநாமதேயமானவை.
*B* - பிரசித்த பண்பாட்டில், மானுடநேயம் பெருமளவில் கவனத்திற் கொள்ளப்படுகின்றது.
*C* - பூகோளப் பண்பாட்டில், தேசிய பண்பாட்டு அடையாளங்கள் சரிவைச் சந்திக்கின்றன.

மேற்படி கூற்றுகளில்

(1) *A* மாத்திரம் சரியானது. (2) *B* மாத்திரம் சரியானது.
(3) *A* யும் *B* யும் மாத்திரம் சரியானவை. (4) *A* யும் *C* யும் மாத்திரம் சரியானவை.
(5) *B*யும் *C*யும் மாத்திரம் சரியானவை.

**26.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) கோலம் தமிழ்மொழியிலிருந்து பெறப்பட்ட ஓர் வார்த்தையாகும்.
(2) பெறுநரால் பெற்றுக்கொள்ளப்படும் செய்தியொன்றானது வாயிற்காப்பின் அடிப்படையிலானது ஆகும்.
(3) குழுத்தொடர்பாடல் பெறுநர்களின் எண்ணிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டதாகும்.
(4) மொழியின் படைப்பாக்கப் பண்பு அச்சு ஊடகங்களில்கூட காணக்கிடைக்கப் பெறுகின்றது.
(5) வாய்மொழிசாராத் தொடர்பாடல் முறைமைகள் எழுத்துத் தொடர்பாடலிலும் உள்ளடக்கப்பட முடியுமானவை ஆகும்.

**27.** ஊடக விளங்கறிவின் உயர்மட்டமொன்றை எய்தியிருப்பதற்கு, 'தகவல்' ஒன்றை ஒருவர் அவசியம் அறிவதற்கான மிக முக்கியமான வினாவைத் தெரிவுசெய்க.

(1) சம்பவம் எது?
(2) எவரெவர் சம்பந்தப்படுகின்றனர்?
(3) எங்கு அது நடைபெற்றது?
(4) எந்த நேரத்தில் அது நடைபெற்றது?
(5) எவ்வாறு அது நடைபெற்றது?

**28.** 'ஊடக ஒழுக்க விதிகள் மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகள்' தொடர்பான மிகப் பொருத்தமான தேர்வைத் தெரிவுசெய்க.

(1) அது ஓர் தொழில்வாண்மைமிக்க பொறுப்புடமையாகும்.
(2) அது சட்டபூர்வமானதாகும்.
(3) அது ஓர் தார்மீக ஒழுக்கப் பயன்பாடாகும்.
(4) அது ஓர் தனிப்பட்ட நடத்தைப் பண்பாகும்.
(5) அது ஊடக சுதந்திரத்தின் ஓர் அடையாளமாகும்.

**29.** வெளிநாட்டுக்குப் பயணமாக வீட்டை விட்டு மகன் செல்வதை, அவன் மறையும்வரை அத்திசை நோக்கிக் கண்களில் கண்ணீருடன் தாய் பார்த்துக் கொண்டிருந்தார். இந்தச் சம்பவத்தை உருவ ஊடகத்திற்கு ஏற்படுத்த மிகப் பொருத்தமான கமெரா எடுப்புக்கள் முறையே

(1) இடைநிலை எடுப்பு மற்றும் இடைநிலை அண்மை எடுப்பு
(2) மிக நீள் எடுப்பு மற்றும் அண்மை வீச்செடுப்பு
(3) மிக நீள் எடுப்பு மற்றும் இடைநிலை எடுப்பு
(4) அண்மை எடுப்பு மற்றும் மிக அண்மை எடுப்பு
(5) மிக நீள் எடுப்பு மற்றும் நடுநிலை எடுப்பு

**30.** ஆய்வொன்றில், நிகழ்வொன்று ஆகக்கூடிய தடவைகள் இடம்பெறுவது காட்டப்படுவது

(1) இடையத்தினால் ஆகும்.
(2) ஆகாரத்தினால் ஆகும்.
(3) இடையினால் ஆகும்.
(4) விகிதாசாரத்தினால் ஆகும்.
(5) வகுப்பு இடைவெளியினால் ஆகும்.

[பக். 5 ஐப் பார்க்க

**31.** தொடர்பாடல் செயன்முறையானது தொழில்நுட்பப் பார்வையொன்றினூடாக மேற்கொள்ளப்பட்டது
(1) ஷனொன் மற்றும் வீவர் தொடர்பாடல் மாதிரியினால் மாத்திரம் ஆகும்.
(2) HUB தொடர்பாடல் மாதிரியினால் மாத்திரம் ஆகும்.
(3) ஒஸ்கூட் மற்றும் ஷ்ராம் தொடர்பாடல் மாதிரியினால் மாத்திரம் ஆகும்.
(4) ஷனொன் - வீவர் மாதிரியுடன் HUB தொடர்பாடல் மாதிரியினாலும் ஆகும்.
(5) HUB தொடர்பாடல் மாதிரியுடன் ஒஸ்கூட் - ஷ்ராம் தொடர்பாடல் மாதிரியினாலும் ஆகும்.

**32.** தொடர்பாடல் மாதிரிகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பின்னூட்டம் குறிப்பாகக் காட்டப்படுவது
(1) ஒஸ்கூட் - ஷ்ராம் மாதிரியில் மாத்திரம் ஆகும்.
(2) HUB மாதிரியுடன் ஒஸ்கூட் - ஷ்ராம் மாதிரியிலும் ஆகும்.
(3) அரிஸ்டோட்டில் மற்றும் HUB மாதிரிகளில் ஆகும்.
(4) ஷனொன் - வீவர் மாதிரியுடன் அரிஸ்டோட்டில் மாதிரியிலும் ஆகும்.
(5) ஒஸ்கூட் - ஷ்ராம் மாதிரியுடன் ஷனொன் - வீவர் மாதிரியிலும் ஆகும்.

**33.** வெகுசன ஊடகங்கள் உட்பட தொடர்பாடல் சந்தர்ப்பங்களில் இடையூறுகள் தோன்றுவது எதிர்பார்க்கப்படக் கூடியதாகும். இடையூறு பற்றிக் கவனஞ் செலுத்தப்பட்டது
(1) ஷனொன் - வீவர் தொடர்பாடல் மாதிரியில் மாத்திரம் ஆகும்.
(2) ஷனொன் - வீவர் தொடர்பாடல் மாதிரியுடன் அரிஸ்டோட்டில் தொடர்பாடல் மாதிரியிலுமாகும்.
(3) அரிஸ்டோட்டில் தொடர்பாடல் மாதிரியுடன் ஒஸ்கூட் - ஷ்ராம் தொடர்பாடல் மாதிரியிலும் ஆகும்.
(4) ஒஸ்கூட் - ஷ்ராம் தொடர்பாடல் மாதிரியுடன் HUB தொடர்பாடல் மாதிரியிலும் ஆகும்.
(5) HUB தொடர்பாடல் மாதிரியுடன் ஷனொன் - வீவர் தொடர்பாடல் மாதிரியிலும் ஆகும்.

**34.** தனிப்பட்ட அவதானம் பற்றிய மிகச்சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது திறன்களின் அடிப்படையில் உருவாகிறது.
(2) அதன் வளர்ச்சியின் முக்கிய அம்சமாக அறிவு அமைகிறது.
(3) தகவற் தொகுப்புக்களுடன் தொடர்புடையதாக அது வளர்ச்சிபெறுகிறது.
(4) அது வலுக்குன்றும்போது, மக்கள் வெகுசன ஊடகங்களால் செல்வாக்குக்கு உட்படுத்தப்பட முடியுமாகிறது.
(5) வெகுசன ஊடகச் சூழமைவினால், அதில் மாற்றங்கள் உருவாகமுடியும்.

**35.** இலங்கையில் விவசாய உற்பத்திகள் பற்றிய தொடரிணைக் கட்டுரையொன்றை வாசித்துக் கொண்டிருந்த நிமலன், அந்தக் கட்டுரையில் மத்திய வங்கி அறிக்கையை அணுகும் இணைப்பு (link) ஒன்றைக் கண்டார். அந்த இணைப்பினூடாக மத்திய வங்கியின் சில அறிக்கைகளை அணுகிய அவர், மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொண்டார். இந்தச் சூழலில், நிமலனினால் பயன்படுத்தப்பட்ட புதிய ஊடகப் பண்புகள் முறையே
(1) எண்ணிமப்படுத்தல், மீயுரை, தரவுத்தளம் ஆகும்.
(2) வலையமைப்பாதல், இடைத் தொடர்பாக்கம், தரவுத்தளம் ஆகும்.
(3) மீயுரை, தானியங்கி, அதிவேகச் செய்தியனுப்புகை ஆகும்.
(4) எண்ணிமப்படுத்தல், தானியங்கி, வலையமைப்பாதல் ஆகும்.
(5) தானியங்கி, எண்ணிமப்படுத்தல், மீயுரை ஆகும்.

**36.** இலங்கையில் தகவல் உரிமைச் சட்டத்தின்படி தகவல்களை வழங்குவதற்கு நேரடியான கடப்பாட்டைக் கொண்டிராத அமைப்புகள் / நிறுவனங்கள்
(1) திணைக்களங்கள் ஆகும்.
(2) கூட்டுத்தாபனங்கள் ஆகும்.
(3) சபைகள் ஆகும்.
(4) அரசியற் கட்சிகள் ஆகும்.
(5) உள்ளூராட்சிச் சபைகள் ஆகும்.

**37.** தனியாள் ஒருவரை அடிப்படையாகக் கொண்டு, தனிப்படச் சென்றடைதலுடன் (personal casting) அதிக உறவை வெளிக்காட்டுவது
(1) செய்திப்பத்திரிகை ஆகும்.
(2) வானொலி ஆகும்.
(3) தொலைக்காட்சி ஆகும்.
(4) புதிய ஊடகம் ஆகும்.
(5) சமூக ஊடகம் ஆகும்.

PAST PAPERS WIKI

**38.** பிரச்சினைகளிலிருந்து விலகிச் செல்வதற்கும் மாற்றுக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் வெகுசன ஊடகங்கள் பயன்படுமாற்றலானது
(1) விலகிச் செல்லுதல் (divergence) எனப்படும்.
(2) அறிதிறன் (cognition) எனப்படும்.
(3) சாராம்சப்படுத்தல் (abstraction) எனப்படும்.
(4) மேற்பார்வை (surveillance) எனப்படும்.
(5) பின்வாங்குதல் (withdrawal) எனப்படும்.

**39.** ஆய்வுத்தரவுகள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) ஆய்வறிக்கை ஒன்றிலிருந்து பெறப்படும் தரவு முதனிலைத் தரவாகும்.
(2) பண்புசார் தரவுகள் எப்போதும் புள்ளிவிபரவழி அளிக்கை செய்யப்பட முடியாதவை.
(3) அளவுசார் தரவுகள் புள்ளிவிபரவழி அளிக்கை செய்யப்படுவது கடினமாகும்.
(4) தரவு சேகரிப்பில் வினாக்கொத்து மிகவும் பொருத்தமான முறையாகும்.
(5) வினாக்கொத்து வழியாக அளவுசார் தரவுகளோடு, பண்புசார் தரவுகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**40.** பொதுசனத் தொடர்பாடல் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது வாய்மொழி வடிவம் சார்ந்து மேற்கொள்ளப்பட வாய்ப்பிருந்தாலும், வாய்மொழிசாரா வடிவமொன்றை அது எடுத்துக்கொள்ளாது.
(2) அபிப்பிராயமொன்றை உருவாக்க அது பயன்படக் கூடுமானாலும், வெவ்வேறு தரப்புக்களின் கவனத்தை வெற்றிகொள்வதற்கு அதனைப் பயன்படுத்த முடியாது.
(3) அது தொடர்பாடல் வடிவமொன்றாக இருந்தாலும், தொழில்நுட்பக் கருவிகளை அது பயன்படுத்துகிறது.
(4) செய்தியைப் பெற்றுக்கொள்ளும் வரையறைக்குள் பெறுநர் இருக்கவேண்டும் என்பதுடன், ஒரு மக்கள் குழுவினரைத் தூண்டுதல் செய்ய அது பயன்படுத்தப்படலாம்.
(5) பொதுசனத் தொடர்பாடல் சந்தர்ப்பத்துக்கான உதாரணமாக தேர்தல் பேரணிகள் அமைந்தாலும், இசை நிகழ்ச்சிகள் அதனோடு சேரமாட்டாது.

**41.** ஊடக விளங்கறிவு பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருத்திற்கொள்க.
*A* - அது உள்நோக்கமின்றி விருத்தியடைய முடியும்.
*B* - அது பாடசாலைக் கல்விச் செயன்முறையுடன் இணைத்துக் கொள்ளப்படுவது அவசியம்.
*C* - அது ஊடகவியலாளர்கள் அவசியம் கொண்டிருக்க வேண்டிய ஒரு திறனாகும்.
*D* - அது உணர்ந்து கவனிக்கப்படும் தகவல்களின் அடிப்படையிலானது.
மேற்படி கூற்றுகளில்
(1) *A, B, C* சரியானவை, *D* தவறானது. (2) *A, B, D* சரியானவை, *C* தவறானது.
(3) *A, C, D* சரியானவை, *B* தவறானது. (4) *B, C, D* சரியானவை, *A* தவறானது.
(5) *A, B, C, D* அனைத்தும் சரியானவை.

**42.** ஊடக ஒழுங்குபடுத்தல் தொடர்பில் மிகப் பொருத்தமான தரப்புக்களின் இணையைத் தெரிவுசெய்க.
(1) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை - ஆசிரியர்
(2) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு - விநியோகஸ்தர்
(3) இலங்கை பத்திரிகைப் பேரவை - வாசகர்
(4) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு - விளம்பரதாரர்
(5) இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம் - நேயர்

**43.** ஊடக உரிமையாளர்களால் பாதிக்கப்படாத ஆளுமையுடையவராக ஒருவர் வளர்ச்சிபெறுவது
(1) ஊடகக் குவிகை வழியாகும்.
(2) ஊடக விளங்கறிவு வழியாகும்.
(3) ஊடக சுதந்திரம் வழியாகும்.
(4) ஊடகப் பண்பாடு வழியாகும்.
(5) ஊடகப் பொருளாதாரம் வழியாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

**44.** நிகழ்வு முகாமைத்துவத்தின் அடிப்படைப் படிமுறைகள் ஒழுங்கு முறையில் உள்ளடங்குவது
(1) திட்டமிடல், தயார்படுத்துதல், பரிசோதித்தலும் மீளாய்வு செய்தலும், செயற்பாடு ஆகியவற்றில் ஆகும்.
(2) திட்டமிடல், பரிசோதித்தலும் மீளாய்வு செய்தலும், செயற்பாடு, பகிர்வு ஆகியவற்றில் ஆகும்.
(3) பரிசோதித்தலும் மீளாய்வு செய்தலும், தயார்படுத்துதல், செயற்பாடு, கட்டுப்பாடு ஆகியவற்றில் ஆகும்.
(4) செயற்பாடு, திட்டமிடல், அவதானிப்பு, தயார்படுத்துதல் ஆகியவற்றில் ஆகும்.
(5) பரிசோதித்தலும் மீளாய்வு செய்தலும், தயார்படுத்துதல், செயற்பாடு, அவதானிப்பு ஆகியவற்றில் ஆகும்.

**45.** பொதுமக்கள் தொடர்பு விபரங்களை உள்ளடக்கிய பின்வரும் அட்டவணையைக் கருத்திற்கொள்க.

| வகை | முறைமை |
|---|---|
| *A*. அரச - பொதுமக்கள் தொடர்பு | *1*. ஊடக மாநாடுகள் |
| *B*. நிறுவன - பொதுமக்கள் தொடர்பு | *2*. சமூகப் பொறுப்புடமை |
| *C*. தொழில்சார் - பொதுமக்கள் தொடர்பு | *3*. உயர்மட்டத் தொடர்புகள் |
| *D*. வியாபார - பொதுமக்கள் தொடர்பு | *4*. நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) |
| *E*. ஊடக - பொதுமக்கள் தொடர்பு | *5*. கௌரவம் |

முறைமையுடன் பொருத்தமாக இணையும் ஒவ்வொரு பொதுமக்கள் தொடர்பு வகையையும் உள்ளடக்கும் சரியான தேர்வைத் தெரிவுசெய்க.
(1) *A*1, *B*2, *C*3, *D*4 மற்றும் *E*5
(2) *A*2, *B*3, *C*4, *D*5 மற்றும் *E*1
(3) *A*3, *B*4, *C*5, *D*1 மற்றும் *E*2
(4) *A*3, *B*5, *C*2, *D*4 மற்றும் *E*1
(5) *A*5, *B*4, *C*3, *D*2 மற்றும் *E*1

**46.** 1970 களின் பிற்பகுதியில் மக்பிரைட் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது
(1) சர்வதேச உறவுகளை ஸ்தாபிப்பதற்கு ஆகும்.
(2) நிறுவனரீதியான தொழில்நுட்ப விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஆகும்.
(3) பொதுச்சேவை எண்ணக்கருவை ஸ்தாபிப்பதற்கு ஆகும்.
(4) பூகோள ஊடகப் பிரதிநிதித்துவத்தை நியாயப்படுத்துவதற்கு ஆகும்.
(5) வானொலி அலைவரிசைகளை மாற்றுவது பற்றி ஆராய்வதற்கு ஆகும்.

**47.** கூட்டு ஒழுங்குபடுத்தலை (co-regulation) ஏற்றுக்கொள்வது, இலங்கையில் பிரேரிக்கப்படும் ஊடகக் கொள்கையின் அடிப்படை எண்ணக்கருவாகும். இது
(1) ஊடகங்களை அரசாங்கம் அவசியம் கட்டுப்படுத்தவேண்டும் என்பதை அடையாளங்காட்டுகிறது.
(2) சர்வதேச தரநிர்ணயங்களுக்கு ஏற்ப ஊடகக் கட்டமைப்பு அவசியம் தயார்படுத்தப்பட வேண்டுமென்பதை அடையாளங் காட்டுகிறது.
(3) வெகுசன ஊடக நிறுவனங்களால் ஒழுங்குபடுத்தற் செயன்முறை அவசியம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதை அடையாளங் காட்டுகிறது.
(4) வெகுசன ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் தலையிடவே கூடாது என்பதை அடையாளம் காட்டுகிறது.
(5) ஊடகப் பிரதிநிதிகளின் தலையீட்டின் அடிப்படையில் அரசாங்கம் கூட்டிணைந்து செயற்படுவதை அடையாளம் காட்டுகிறது.

**48.** ஊடக அதிகாரி ஒருவரின் கடமைகளில் **உள்ளடக்கப்படாதது**
(1) நிறுவனத்தின் இலக்குகள் பற்றி பொதுமக்களை அறியச் செய்வது ஆகும்.
(2) நிறுவனம் சார்பில் ஊடக மாநாடுகளில் கலந்துகொள்வது ஆகும்.
(3) நிறுவனத்தின் நிதி மற்றும் செலவீடுகளை முகாமைப்படுத்துவது ஆகும்.
(4) முரண்பாடுகளை முகாமை செய்வதற்கு ஊடகங்களைப் பயன்படுத்துவது ஆகும்.
(5) ஊக்குவிப்புக்காக வெவ்வேறு ஊடக உள்ளடக்கங்களை உருவாக்குவது ஆகும்.

**49.** உணவு தயாரிக்கும் தொழிற்சாலையொன்றின் உற்பத்தியை உட்கொண்ட பெருந்தொகையான மக்கள் நோய்வாய்ப்பட்டதாகவும் அவ் உற்பத்திச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டதாகவும் வெகுசன ஊடகமொன்று அறிக்கையிட்டது. அங்கு உற்பத்திச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுகையில் அதன் மதிப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாக நீங்கள் பிரேரிப்பது யாது?

(1) ஊடக அறிக்கையொன்றை வெளியிடுவதாகும்.
(2) ஊடகவியலாளர்களுக்கு தொழிற்சாலை விஜயமொன்றை ஒழுங்கமைத்தலாகும்.
(3) வீடியோ ஒன்றை வெளியிடுவதாகும்.
(4) ஊடக மாநாடொன்றை நடாத்துவதாகும்.
(5) ஊடகவியலாளர்களுக்குப் பரிசுகளை அளிப்பதாகும்.

**50.** அபிவிருத்தித் தொடர்பாடலுடன் தொடர்புடைய வரலாற்றுக் கட்டங்கள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) தேசிய அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை டட்லி சியர்ஸ் முதலில் அடையாளப்படுத்தினார்.
(2) அபிவிருத்தித் தொடர்பாடல் கீழிருந்து மேலாக இடம்பெற வேண்டுமென்பதை மேற்கத்தேய அறிஞர்கள் ஏற்றுக்கொண்டனர்.
(3) சுரண்டலும் தங்குநிலைப் பொருளாதாரமும் மேற்கத்தேய மற்றும் மூன்றாம் உலக நாடுகளுக்கிடையிலான உறவுகளில் முதன்மைவாய்ந்தனவாக இருந்தன.
(4) பொருளாதார நலன்புரிச் செயற்பாடுகளின் முதன்மையான குறிகாட்டிகளாக சமூக சந்தைப்படுத்தல், நவீனமயவாக்கல், ஊடக ஊக்குவிப்புக்கள் ஆகிய அம்சங்கள் முதன்மையானவையாக இருந்தன.
(5) 1960களில், இலத்தீன் அமெரிக்க நவீனமயமாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றி, அபிவிருத்தித் தொடர்பாடலின் திருப்புமுனையாக அமைந்தது.

* * *

PAST PAPERS WIKI

AL/2025/29/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **40** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** (i) தற்போதைய சமூகத்தில் பயன்படுத்தப்படும் முறைசாராத் தொடர்பாடல் முறைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) மெய்நிகர் தொடர்பாடலின் **இரண்டு** ஆதாயங்களைச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) பாரம்பரியத் தொடர்பாடல் செயல்வகையான நாட்டார் பாடல்களில் காணக்கிடைக்கும் **மூன்று** பண்புகளை உதாரணங்களுடன் விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) ஜேம்ஸ் வாட்சன் கூறுவதன்படி படைப்பாக்கத்தினால் அடையப்பெறும் **நான்கு** அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றில் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

**2.** (i) காலனித்துவ காலத்திலிருந்து ஆவணப்படங்களையும் குறும்படங்களையும் உள்ளூரில் தயாரிப்பதில் முன்னோடியாகவிருந்த அரசாங்க நிறுவனத்தைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) வாய்மொழிசாராத் தொடர்பாடலின் கூறுகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஊடகப் பண்பாட்டின் பண்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) உங்களது தெரிவிலிருந்தான வெகுசன ஊடக வகையொன்றுடன் தொடர்புடையதாக, தொடர்பாடல் செயன்முறையின் **நான்கு** கூறுகளை ஆராய்க. (16 புள்ளிகள்)

**3.** சட்டங்களால் சுமத்தப்படுவதை விட, பெறுநர்கள் மீதான ஊடகங்களின் எதிர்மறைச் செல்வாக்கினை இழிவளவாக்கும் பொறுப்பினை நாம் அனைவரும் கொண்டிருக்கின்றோம் என ஆசிரியர் வலியுறுத்திக் குறிப்பிட்டார்.

(i) ஆளிடைத் தொடர்பாடலில் ஆதாயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) HUB மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ள பின்வரும் அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(அ) வாயிற்காப்பாளர்கள்

(ஆ) தாக்கங்கள் (08 புள்ளிகள்)

(iii) சமூக ஊடகங்கள் காரணமாகக்கூடிய **எதிர்மறைத்** தாக்கங்கள் **மூன்றினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (12 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

(iv) 'சமூகப் பொறுப்புடமைக்கான ஒழுங்குபடுத்தலின் அவசியம்' என்னும் கருப்பொருளில், பின்வரும் ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை உதாரணங்களுடன் விபரித்து, **250 சொற்களுக்குக்** குறையாதவகையில் செய்திப் பத்திரிகை ஒன்றுக்குக் கட்டுரையொன்றை எழுதுக.
(அ) இலங்கை பத்திரிகைப் பேரவை
(ஆ) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (16 புள்ளிகள்)

**4.** ஊடக விளங்கறிவுடன் கூடிய ஊடகவியலாளர்களையும் பெறுநர்களையும் உருவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை பாடசாலை மேற்கொள்ள வேண்டுமென, ஊடக நாள் விழாவில், சிறப்புப் பேச்சாளர் எடுத்துரைத்தார்.

(i) வெகுசன ஊடகங்களின் விசேட பண்புகள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) மேற்பார்வை, பொருட்கோடல் ஆகிய வெகுசன ஊடகப்பணிகள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) உயர்நிலை ஊடக விளங்கறிவை எய்திக்கொள்வதால் பெறக்கூடிய ஆதாயங்கள் **மூன்றினை** வானொலி ஊடகத்துடன் தொடர்புடையதாக விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) ஓர் விமர்சனரீதியிலான பெறுநருக்கு தொலைக்காட்சி ஊடகப் பயன்பாட்டில் பின்வரும் திறன்கள் முக்கியமாக இருக்கும் வகையினை உதாரணங்களுடன் விளக்குக.
(அ) பகுப்பாய்வு (Analysis)
(ஆ) மதிப்பீடு (Evaluation)
(இ) குழுவாக்கல் (Grouping)
(ஈ) சாராம்சப்படுத்தல் (Abstraction) (16 புள்ளிகள்)

**5.** (i) ஆய்வுகளில் பயன்படும் **இரண்டு** வகைத் தரவுகளையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) அபிவிருத்தி பற்றிய வரைவிலக்கணம் **ஒன்றைக்** குறிப்பிட்டு, அதனைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) அளவாய்வைப் (survey) பயன்படுத்துவதன் ஆதாயங்கள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) பின்வரும் சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் தொடர்புச் செயன்முறை முன்னெடுக்கப்படும் வகையினை உதாரணங்களுடன் விளக்குக.
(அ) நிறுவன - பொதுமக்கள் தொடர்பு
(ஆ) வியாபார - பொதுமக்கள் தொடர்பு (16 புள்ளிகள்)

**6.** 'சினிமாவும் சமூகமும்' என்னும் கருப்பொருளில் செயலமர்வொன்றை ஒழுங்கமைக்க, உங்களது பாடசாலை ஊடகக் கழகம் திட்டமிட்டுள்ளது.

(i) பிலிப் கொட்லரால் முன்வைக்கப்பட்ட, நிகழ்வு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிகழ்வு வகைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஊடக ஒழுங்குபடுத்தலின் அவசியத்தை, **இரண்டு** அம்சங்களின் கீழ் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) மேற்படி செயலமர்விற்கு, நீங்கள் ஒரு நிகழ்வு முகாமையாளராகப் பணியாற்றுவீர்களாயின், உங்களது வகிபங்குடன் தொடர்புடைய பணிகள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) இந்தச் செயலமர்வில் பங்கேற்பாளர்களுக்கு உரை நிகழ்த்தும் பேச்சாளர், குழுத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தக் கூடுமான முறைகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

7. (i) அபிவிருத்தியுடன் தொடர்புடையதாக எவரெட் எம். ரோஜர்ஸினால் அறிமுகப்படுத்தப்பட்ட கோட்பாட்டைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) அபிவிருத்திக்கான தொடர்பாடலில் 'தேவைகளை மையப்படுத்துதல்' என்பதனால் அர்த்தப்படுவது யாதெனச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) 2003 ஆம் ஆண்டின் புலமைச் சொத்துச் சட்டத்தின்படி, 'நியாயமான பாவனை' பயன்படுத்தப்படக் கூடுமான பின்வரும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(அ) திறனாய்வு (criticism)

(அ) கற்பித்தல் (teaching)

(இ) செய்தி அறிக்கையிடல் (news reporting) (12 புள்ளிகள்)

(iv) சிறுகூறுகளாக்குதலின் தன்மையை **நான்கு** அடிப்படை அம்சங்களுடன் தொடர்புடையதாகப் பரிசோதிக்குக. (16 புள்ளிகள்)

* * *

Past Papers Wiki

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library